நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம், அந்தப் பகுதியில் சேர்க்கை சதவிகிதம் கூடுதலாக இருந்தால்தான், கல்லூரி தேவைப்படும். கூடுதல் சதவிகிதம் இல்லையென்றால் அங்கு புதிய கல்லூரி தொடங்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, அந்த மாவட்டம் குறித்து முழுமையாக ஆய்வு செய்யப்படும். தொடர் செலவினம், தொடராச் செலவினத்தையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செய்ய முடியாது. ஆகவே, அதையெல்லாம் அரசு பரிசீலனை செய்துதான் ஒரு கல்லூரியைத் தொடங்க முடியும். சென்ற 6 ஆண்டு காலங்களில் 45 கல்லூரிகளை, அதாவது 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை, 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளைத் தொடங்கிய புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் அரசில் எங்கெங்கு மாணவர்கள் சேர்க்கை கூடுதலாக இருக்கிறதோ, அங்கெல்லாம் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, உறுப்பினரது கோரிக்கையை அரசானது பரிசீலிக்கும் என்பதை மீண்டும் ஒரு முறை சொல்லி, அமர்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபொழுது ** என்று ஒரு வார்த்தை சொன்னார்கள். அதை ** என்று மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அது நீக்கப்படுகிறது. காலையில் வந்தவுடன் கொஞ்சம் tension ஆகிவிட்டார், விடுங்கள்.

வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

77—

நேரடி நெல் கொள்முதல் நிலையம்

***2225—திரு. எஸ். ஆஸ்டின்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கன்னியாகுமரி தொகுதி, திட்டுவிளை மற்றும் தாழக்குடியிலுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைச் சீரமைத்து, மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் தாழக்குடி நேரடி நெல் கொள்முதல் நிலையம், அங்கன்வாடி கட்டடத்தின் ஒரு பகுதியிலும், திட்டுவிளை நேரடி நெல் கொள்முதல் நிலையம் வாடகைக் கட்டடத்திலும் நெல் வரத்து உள்ள பருவகாலங்களில் மட்டும் இயங்கி வருகின்றன. எனவே, மேற்கண்ட நெல் கொள்முதல் நிலையங்களைத் தற்போது சீரமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. நெல் வரத்து இருக்கும்பட்சத்தில் இந்த இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நேரடியாக நெல் கொள்முதல் செய்யக்கூடிய நிலையங்கள் இருந்தாலும்கூட, கடந்த 6, 7 ஆண்டு காலமாக அங்கே நெல் கொள்முதல் செய்யக்கூடிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவில்லை. நெல்லைக் கொண்டுபோகும்போதுகூட, அரசு அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், ஈரப்பதம் அதிகமாக இருக்கின்றது, கருப்பு நெல் அதிகமாக இருக்கின்றது என்ற காரணத்தைச் சொல்லி, கொண்டு போகக்கூடிய நெல்கூட, கொள்முதல் செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்படுகிறது. எனவே, விவசாயிகள் மாவட்ட ஆட்சியாளர்களிடம் சொல்லியும் கொள்முதல் செய்யாததால், நெல் கொள்முதலுக்காகக் கொண்டு போவதையே இப்பொழுது நிறுத்திவிட்டார்கள்; கொண்டு போனாலும் எடுப்பதில்லை. காரணம் என்னவென்று சொன்னால் மற்ற மாவட்டங்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் சற்று வித்தியாசம் உண்டு.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

Climate-லும் வித்தியாசம் உண்டு. கடற்கரை சூழ்ந்த ஒரு மாவட்டம். காற்றில்கூட moisture இருக்கும். சாதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் மற்ற மாவட்டங்களைவிட நெல்லில் ஈரப்பதமும் அதிகமாக இருக்கும், கருப்பு நெல்லும் அதிகமாக இருக்கும். எனவே, இந்த அரசை கேட்டுக்கொள்வதெல்லாம் கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சற்று விலக்களித்து, ஈரப்பதத்தின் சதவிகிதத்தையும், கருப்பு நெல்லின் சதவிகிதத்தினையும் சற்று உயர்த்திக் கொடுத்து நெல் கொள்முதல் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும். திரு. ஆஸ்டின், நல்ல கேள்வி கேட்டுள்ளார். அமைதியாக இருங்கள். மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் விளைகிற நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்கிற ஒரு குற்றச்சாட்டையும், நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறந்திருந்தாலும் அங்கே நெல் கொள்முதல் செய்யப்படவில்லை என்கிற ஒரு செய்தியையும் இங்கே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம், எங்கெல்லாம் நெல் விளைச்சல் இருக்கிறதோ, விளைவிக்கப்படுகிற நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு வரப்படுகிற சூழ்நிலை இருக்கிறதோ, அந்த நெல்லை உடனடியாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் தலையாய நோக்கம்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை கருப்பு நெல், ஈரப்பதம் இந்த இரண்டையும் பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த காலத்தில் 1-10-2002 ஆம் ஆண்டு பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தினைக் கொண்டு வந்தார்கள். அதனாலேதான் தமிழகத்தில் இன்றைக்கு நெல் உற்பத்தி செய்பவர்களுக்கு உரிய விலை கிடைத்துக் கொண்டிருக்கிறது; அந்தத் திட்டத்தைத்தான் அதற்குப் பின்னால் வந்த தி.மு.க. ஆட்சியும் பின்பற்றியது. அந்த வகையிலேதான் நாம் ஏதாவது ஒரு relaxation வழங்க வேண்டுமென்று சொன்னால்,

மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில்தான் அதனை நாம் நடைமுறைப்படுத்த முடியும். மத்திய அரசு, பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்மூலம் கொள்முதல் செய்கிற நெல்லுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஊக்கத் தொகையினை வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

முற்பகல் 10-55

கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த ஆறு ஆண்டுக் காலமாக நெல் கொள்முதல் செய்யப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். இந்த ஆறு ஆண்டுகளில், தமிழகம் முழுவதும் 490 கோடி ரூபாய் ஊக்கத் தொகை கொடுத்திருக்கிற ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டுமென்று சொன்னால், அந்தத் தளர்வு தேவைப்படும் நேரங்களில் மத்திய அரசின் ஒப்புதலோடு தளர்வு செய்யப்படுகிறது. கடந்த முறை ஆகஸ்ட் மூன்றாம் தேதி, 2014-ல் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கின்றார். நான் அவருக்கு இந்தப் பதிலைச் சொல்லியிருக்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தோவாளை பகுதியில் 20,000 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்படுவதாக அன்றைக்குக் குறிப்பிட்டிருந்தார். 20,000 மெட்ரிக் டன் விளைச்சல் இருந்திருந்தால், அதில் marketable surplus என்பது, அதாவது உபரி சந்தைக்கு 25% வரும். எனவே, அந்த நெல்லையும், விவசாயிகள் கேரளாவிற்குக் கொண்டு செல்கின்றார்கள் அல்லது வியாபாரிகளிடம் அதிக விலை கிடைத்தால் விற்றுவிடுகிறார்கள். எனவே, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படவில்லை என்று சொல்வது சரியல்ல என்பதனை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2006-2007 ஆம் ஆண்டு கொள்முதல் பருவத்தில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எந்தக் கொள்முதல் நிலையமும் திறக்கப்படவில்லை. 2007-2008-ல் ஒரு கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. 2008-2009-ல் மூன்று கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. 2009-2010 மற்றும் 2010-2011-ல் எந்தக் கொள்முதல் நிலையமும் தி.மு.க. ஆட்சி காலத்தில் திறக்கப்படவில்லை. 20014-2015-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் 8 கொள்முதல் நிலையங்களைத்

திறந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், 2014-2015-ல் 8 கொள்முதல் நிலையங்கள் திறந்தும், அவற்றில் எந்த நெல் வரத்தும் இல்லை. 2015-2016-ல் 6 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. ஆனால், வெறும் 67 நெல் மூட்டைகள்தான் வந்தன. 2016-2017-ல், இந்தப் பருவத்தில் செண்பகராமன்புதூரில் கட்டப்பட்டுள்ள நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் உள்பட, 6 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் வரத்து ஏதும் இல்லாத காரணத்தினால் நெல் கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டன. தேவையென்றால், நெல் வரத்து வருமேயானால், உடனடியாக அங்கே நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.*

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே கருத்தைத்தான் நான் சொன்னேன். அவர்கள் நெல் வரத்து வரவில்லை என்று சொல்கிறார்கள். நான் சொல்வது என்னவென்றால், நெல்லைக் கொண்டு போகின்றார்கள், அதனைக் கொள்முதல் செய்வதில்லை. காரணம் என்னவென்றால், 17% ஈரப்பதம் இருக்க வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டை அவர்கள் வைத்திருக்கின்றார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மற்ற மாவட்டங்களைவிட வித்தியாசமான சூழல் இருக்கின்ற காரணத்தினால் ஈரப்பதம் 17% என்பது எந்த நிலைமையிலும் கிடைக்காது. கொண்டு போகின்ற நெல்லையும், அதிகாரிகள்* reject *செய்கிற காரணத்தினால்தான் அங்கே கொள்முதல் நடைபெறவில்லை. எனவே, நாங்கள் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நீங்கள் மத்திய அரசிடம்* consult *செய்ய வேண்டுமென்றால் செய்யுங்கள். ஏற்கெனவே ஒரு முறை தஞ்சாவூர் மாவட்டத்தில் மழை நேரத்தில் அந்த ஈரப்பதத்தின் சதவிகிதத்தை அதிகப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல் ஒரு விலக்கை கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொடுத்தால், அதிகமான அளவில் நெல்லை கொள்முதல் செய்ய முடியும்.*

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகச் செயல்படக்கூடிய நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய

பற்றாக்குறையாக இருக்கின்றது. கிட்டத்தட்ட 1,000, 1,400 குடும்ப அட்டைகள் புழங்கக்கூடிய கடைகளில்கூட ஒரே ஒரு பணியாளர்தான் இருக்கிறார். காலையிலிருந்து மாலை வரையில் பெண்கள் எல்லாம் நீண்ட வரிசையில் காத்திருந்தாலும் அன்றைக்கே பொருட்களை வாங்க முடியாமல், மறுநாள் வந்து வாங்கக்கூடிய நிலை இருக்கின்றது. நான் பல இடங்களில் நேரில் சென்று visit செய்தேன். அதிகாரிகளிடம் கேட்டால், ஆட்கள் இல்லை, நாங்கள் என்ன செய்வது என்று சொல்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து நியாய விலைக் கடைகளில் போதுமான பணியாளர்களை நியமனம் செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச ஆதார விலை வழங்குவது மத்திய அரசுதான். நாம் ஊக்கத் தொகையை மட்டும்தான் வழங்க முடியும். பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தில் இருக்கக்கூடிய கட்டுப்பாட்டைத்தான் எல்லாக் காலத்திலும் கடைப்பிடித்து வருகிறோம். எனவே, மத்திய அரசு நிர்ணயிக்கின்ற தரக்கோட்பாட்டிற்கு உட்பட்ட, uniform specifications-ஐதான் நாம் follow செய்து வருகிறோம். அந்த அடிப்படையில்தான் கன்னியாகுமரி மாவட்டத்திலும் கடைப்பிடிக்கிறோம்; தஞ்சாவூர் மாட்டத்திலும் அதைத்தான் கடைப்பிடிக்கிறோம். தமிழ்நாட்டில் மழைக்காலங்களில் அதிக ஈரப்பதம் அல்லது கருப்பு நெல் இவற்றை எடுக்க வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசாங்கத்திடம் சொல்லி, Hyderabad-ல் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற IGMRI-என்கிற அந்த institute-லிருந்து வரச் சொல்லலாம்; அவர்கள்தான் relaxation கொடுக்கிறார்கள். தேவைப்படுகின்ற இடங்களில் இதுபோன்று relaxation வாங்கியிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஒரு சில ஆண்டுகளில் மட்டுமல்ல. எல்லா ஆண்டுகளிலும், கார்த்திகை, மார்கழி, ஐப்பசி போன்ற மாதங்களில், திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களுக்கு இது அவசியம் தேவைப்படும் என்பதனால் relaxation-ஐ வாங்குகிறோம். எல்லா மாவட்டங்களுக்கும் அந்த relaxation-ஐக் கொடுக்கிறோம்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: தேவைப்பட்டால் கன்னியாகுமரி மாவட்டத்திலும் நெல் வரத்து இருக்குமேயானால், நிச்சயமாக, உறுதியாக அந்த relaxation வாங்கிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கேள்விக்குத் தொடர்பில்லாத இன்னொரு கேள்வியையும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். என்னுடைய துறை சார்ந்த கேள்வி என்பதால் அதற்குப் பதில் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் செயல்படுகிற அங்காடிகளில் பணியாளர் பற்றாக்குறை என்று சொன்னார்கள். தமிழ்நாடு முழுவதும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் 1,440 அங்காடிகள்தான் செயல்படுகின்றன; அதில் ஆயிரக்கணக்கான ஊழியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொன்னார்கள்; அதற்கு வாய்ப்பில்லை. மாண்புமிகு உறுப்பினர் எந்த இடம் என்று குறிப்பிட்டுச் சொன்னால், அந்த இடத்தில் உடனடியாகப் பணியாளர்களை நியமித்து, அங்கு அப்பணிகள் தொய்வின்றி நடக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

78—

ஜவுளிப் பூங்கா

*22132—திரு. ஏ.கே. போஸ்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, நிலையூர் கைத்தறி நகரில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?